**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| P.W.2 | பெயர் : திருமதி. மரிய நேசம்<br>க/பெ : திரு. மரிய ஞான அலங்காரம் | O.S.No.82/2025 | 22.06.2026 |
|---|---|---|---|

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் வா.சா.2 ன் குறுக்கு விசாரணை)

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் வாதி எனது மகள். வழக்கு சொத்தின் சர்வே எண்.112/9 என்று சொன்னால் சரிதான், ஆனால் அதன் உட்பிரிவுகளை எனக்கு தெரியாது. சர்வே எண்.112/9 ன் முழு சொத்து ஆதியில் சவரியப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். சவரியப்பனின் வாரிசுகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து இந்நாள் வரை கூட்டுப்பட்டாவாக இருந்தது என்று சொன்னால் சரிதான்.

எனது கணவர் 2009 ஆம் ஆண்டு தபசில் சொத்தைப் பொறுத்து எனக்கும் எனது மகளுக்கும் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது தரப்பில் வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களிலும் எனது கணவர் தபசில் சொத்தில் பாகப்பிரிவினை நடந்ததாகவும் அதில் தனக்கு இந்த பங்கு கிடைத்ததாகவும் எவ்வித குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். சவரியப்பனின் சொத்து பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக என்னிடம் எந்தவிதமான ஆவணமும் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் என் கணவரின் பெயர் கூட்டுப்பட்டாவாக

காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தினைப் பொறுத்து எவ்வித பாகப்பிரிவினையும் நடைபெறாத நிலையிலும் கூட்டுப்பட்டாவை வைத்துக் கொண்டு எனது கணவர் தனக்கு இவ்வளவு இடம் பாத்தியம் என்று ஆவணங்கள் ஏற்படுத்த எவ்வித சட்டப்படியான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களில் சொத்து விவரத்தில் எனது கணவருக்கு 1/5 பங்கு என்று கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பங்கு 5 என காட்டப்பட்டுள்ள நிலையில் அந்த பங்கின் உரிமையாளர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவரே பொய்யாக 1/5 பங்கு என்று காட்டி மோசடியாக ஆவணங்களை தயாரித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களில் எல்லை விவரங்களில் தெற்கு எல்லையாக தேவதாசன் வகையறா நிலம் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்கள்தான் மூல ஆவணங்களாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தெற்கு எல்லையாக தேவதாசன் வகையறா நிலம் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பிராதில் உள்ள சொத்து விவரத்தில் தெற்கு எல்லையாக தேவதாசன் வகையறா நிலம் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.6 வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.1 ஆவணங்களில் உள்ள சொத்து விவரங்கள் அடிப்படையிலேயே முரணாக இருப்பதால் நான் மேற்படி ஆவணங்களில் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 3

ஆவணங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்து விவரமும் முரணாக இருப்பதால் நான் மேற்படி ஆவணங்களில் அடிப்படையில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி மற்றும் அவரது உடன்பிறந்தவர்களின் சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நாங்கள் மோசடியாக வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு சொத்து இந்நாள் வரை பாகம் பிரிக்கப்படாமல் எங்களது மற்றும் பிரதிவாதி வகையறாக்களின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.112/9 ல் பிரதிவாதி வகையறாக்களுக்கு உரிமம் உண்டு என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் பிரதிவாதிகளின் உடன்பிறந்தவர்களும் கூட்டு உரிமையாளர்களாக இடம் பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். கூட்டு உரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பிறப்பிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. வாதி எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd)M. Siva Rajesh, 22/06/2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.